TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075259

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : VELLORE மாவட்டம் PS: VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 22/2020 மு.த.அ. எண் Date: 23.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT Sections பிரிவுகள்: 7(a) OF P.C. Act 1988
(ii) Act சட்டம்: 1988 as amended by the Sections பிரிவுகள்: as amended by the
(iii) Act சட்டம்: P.C.(Amendment) Act 2018. Sections பிரிவுகள்: P.C.(Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் SEPTEMBER 2020 Date to : நாள் வரை 22.12.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.12.2020 Time நேரம் : 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-II 2020. Time நேரம் : 23.12.2020 7.00 hrs and 8.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் EAST DIRECTION - 6 KMs
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி OFFICE OF THE GENERAL MANAGER AAVIN (VDCMPU Ltd), SATHUVACHARI, VELLORE.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. MURUGAIYAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் PERUMAL
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DAIRY BUSINESS. (g) Address : முகவரி No. 311/2, MODIKUPPAM ST, VADAKARUMBALUR PANCHAYAT, KUTHALAVADI VILLAGE, THURUNCHIAPURAM POST, TIRUVANNAMALAI DISTRICT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. RAVI, MANAGER, AAVIN (VDCMPU Ltd) SATHUVACHARI, VELLORE.
2. Tr. GANESAN, FORMERLY GENERAL MANAGER, AAVIN (VDCMPU Ltd), SATHUVACHARI, VELLORE.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
"NO DELAY"

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. பிரேமகுமன் 23.12.2020 [signature] 23/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.12.2020.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.00hrs.

Name: பெயர் K.S. HEMA CHITHRA,
Rank: நிலை DEPUTY SUPERINTENDENT of Police, V & A.C., VELLORE.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 23.12.2020-ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நான் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, P.முருகையன், வயது.50/2020, த/பெ. பெருமாள், எண்.311/2, கோடிகுப்பம் தெரு, கூத்தலவாடி கிராமம், வடகரும்பலூர் பஞ்சாயத்து, துரிஞ்சாபுரம் அஞ்சல், திருவண்ணாமலை என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் P.முருகையன், வயது.50/2020 த/பெ. பெருமாள் எண்.311/2, கோடிகுப்பம் தெரு, கூத்தலவாடி கிராமம், வடகரும்பலூர் பஞ்சாயத்து, துரிஞ்சாபுரம் அஞ்சல், திருவண்ணாமலை-606805 பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம். அம்மையீர், என் பெயர் முருகையன் நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன், எனக்கு திருமணமாகி ருக்மணி என்ற மனைவியும் சிவசக்திவேல் என்ற மகனும் சிவரஞ்சனி என்ற மகளும் உள்ளனர். நான் என்னுடைய குடும்பத்துடன் திருவண்ணாமலை மாவட்டம் வடகரும்பலூர் பஞ்சாயத்தில் கூத்தலவாடி கிராமத்தில் உள்ள கோடிகுப்பம் தெருவில் வசித்து வருகிறேன். நான் TPD 1595 வடகரும்பலூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளராக கடந்த 15 வருடங்களாக உள்ளேன். மேலும் கடந்த 2019 ஆண்டு முதல் என் மகன் சிவசக்திவேல், சொரகுளத்தூர் குசால்பேட்டை தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்திலிருந்து (BMC) பால் கேன்களை ஏற்றிக்கொண்டு திருவண்ணாமலை வேங்கிக்கால் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு (Milk Chilling Centre) கொண்டுவந்து இறக்கிவிட்டு, காலிகேன்களை வேங்கிக்காலில் இருந்து ஏற்றிக்கொண்டு சொரகுளத்தூர் குசால்பேட்டை BMCC-ல் இறக்குவார், இதற்கு ஒரு லிட்டருக்கு 40 பைசா வீதம் கணக்கிட்டு ஒவ்வொரு மாதமும் சொரகுளத்தூர் குசால்பேட்டை பால் குளிர்விப்பு மையத்தின் செயலாளர் மூலம் என் மகனுக்கு உரிய தொகையை வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள ஆவின் (VDCMPU Ltd.,) பொது மேலாளர் காசோலையாக சொரகுளத்தூர் குசால்பேட்டை BMCC-ன் செயலாளர் மூலம் வழங்குவார். வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு வேலூர் மாவட்டம் தனியாகவும், திருவண்ணாமலை மாவட்டம் தனியாகவும் பிரிக்கப்பட்டு தனித்தனியே பொதுமேலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான் கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை என் பெயரில் இருந்த TN 25 K 6912 மற்றும் TN 25 BL 5406 பதிவு எண் கொண்ட டாட்டா ஏஸ் வண்டியில் பால் கேன்களை என் மகன் எடுத்து சென்று விநியோகம் செய்வது மற்றும் காலி பால் கேன்களை எடுத்து செல்வது ஆகிய வேலைகளை செய்ததற்காக மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் 2019 வரைக்கான நான்கு மாதங்களுக்கான தொகை ரூ.1,81,130/- கிடைக்கப்பெறாமல் நிலுவையில் உள்ளது. நிலுவை தொகை குறித்து கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேல் சொரகுளத்தூர் BMCC

Scanned by CamScanner

செயலாளர் ராமலிங்கம் அவர்களிடம் பல முறை கேட்டேன் அதற்கு அவர் பொது மேலாளர் ஆவின், வேலூர் அவர்களிடம் இருந்து பணம் வரவில்லை வந்தால் கொடுத்துவிடுகிறேன் என்றும் திருவண்ணாமலை பொது மேலாளர் இப்பணத்தை வழங்கமுடியாது, உங்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவை தொகையை வழங்கவேண்டியவர் வேலூர் ஆவின் பொது மேலாளர் தான் அதனால் நீ வேலூர் ஆவின் பொது மேலாளர் அவர்களை பார்த்து பில் தொகையை வாங்கி வா என்று சொன்னார். அதனால் நான் கடந்த செப்டம்பர் 2020 முதல் 3 மாத காலமாக வேலூர் ஆவின் பொது மேலாளர் திரு.கணேசன் அவர்களை பலமுறை நேரில் சென்று பார்த்தேன் அதற்கு அவர் உன்னுடைய செக்கை போட்டு கொடுத்துவிடுகிறேன் அதற்காக நீ கொஞ்சம் செலவு செய்ய வேண்டியிருக்கும் நான் அனைவருக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார் ஆனால் எவ்வளவு பணம் என்று சொல்லவில்லை. அதன் பின் 14.12.2020 அமாவாசை தினத்திற்கு முன்பாக வேலூரில் உள்ள ஆவின் பொது மேலாளார் அலுவலகத்திற்கு சென்று திரு.கணேசன் பொது மேலாளர் அவர்களை சந்தித்தேன், அப்போது அவர் செலவிற்கு ரூ.90,000/- கொடுத்தால் செக் போட்டு கொடுக்கிறேன், உன்னுடைய வேலையும் முடியும் என்றார். அதற்கு அவ்வளவு பணம் என்னிடம் இல்லை இதுவே எனக்கு நஷ்டம் தான் சார், என்று சொன்னேன், அதற்கு திரு.கணேசன் ரூ.75,000/- என சொல்லியும் கடைசியாக ரூ.50,000/- கொடுத்தால் செக் கிடைக்கும் என்று தீர்க்கமாக சொன்னார், அதற்கு நான் அவரிடம் பதில் ஏதும் சொல்லாமல் அங்கிருந்து வந்துவிட்டேன். அதன் பின்னர் மீண்டும் 18.12.2020 அன்று அவரை போனில் தொடர்புக்கொண்டு கேட்டபோது ரூ.50,000/- இல்லாமல் செக் கிடைக்காது என்று போனில் சொன்னார், இன்னிலையில் திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்கால் ஆவின் அலுவலகத்தில் உள்ளவர்கள் மூலம் திரு.கணேசன் அவர்களுக்கு டிரான்ஸ்வர் வந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன் மேலும் 19.12.2020 அவரிடம் எனக்கு வரவேண்டிய நிலுவை தொகை குறித்து போனில் தொடர்பு கொண்டு கேட்க அவர் ரூ.50,000/- இல்லாமல் செக் கிடைக்காது என்று சொன்னார். பின்னர் திரு.கணேசன் பொது மேலாளர் அவர்கள் 22.12.2020 காலை என்னை போனில் தொடர்பு கொண்டு நான் டிரான்ஸ்வர் ஆகிவிட்டேன், நீ ஆவின் வேலூர் அலுவலகத்திற்கு சென்று திரு.ரவி மேனேஜர் என்பவரை பார்த்து பணம் ரூ.50,000/-தை கொடுத்தால் அவர் சொரகுளத்தூர் BMCC செயலாளர் பெயருக்கு செக்கை கொடுத்துவிடுவார் என்று சொன்னார். அதனால் 22.12.2020 மதியம் சுமார் 12.30 மணிக்கு வேலூர் ஆவின் அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தில் இருந்த திரு.ரவி, மேனேஜர் அவர்களை சந்தித்தேன் அவரிடம், என்னுடைய பெயர் முருகையன் என்று சொன்னவுடன் திருவண்ணாமலையா, பொது மேலாளர் கணேசன்

அவர்கள் ஏற்கனவே என்னிடம் உங்கள் சம்மந்தமான விஷயத்தை சொல்லி உள்ளார் பணம் ரூ.50,000/- எடுத்து வந்துவிட்டீர்களா கொடுங்கள் என்றும் பொது மேலாளர் திரு.கணேசன் அவர்கள் டிரான்ஸ்பவர் ஆகிவிட்டார், நீ பணம் கொடுத்தால் மட்டுமே செக்கை கொடுக்குமாறு சொன்னார் அதனால் பணம் கொடுத்தால் செக் கொடுக்கிறேன் என்றார். அதற்கு நான், சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்றேன் அதற்கு அவர் பணம் ரூ.50,000/- கொடுத்தால் செக் கிடைக்கும் உன்னுடைய வேலையும் முடியும் இல்லை என்றால் நான் ஒன்றும் செய்யமுடியாது நீ கொடுக்கும் பணம் எனக்கு மட்டுமே இல்லை திரு.கணேசன் பொது மேலாளர் அவர்களுக்கும் தான், அதனால் நான் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்யமுடியாது, எனவே 23.12.2020 அன்று, பணத்துடன் வேலூர் வந்து எனக்கு போன் செய்தால் நான் பார்த்துக்கொள்கிறேன் செக்கையும் கொடுத்துவிடுகிறேன் என்று திட்டவட்டமாக சொன்னார். திரு.கணேசன், முன்னாள் பொது மேலாளர், ஆவின் வேலூர் மற்றும் திரு.ரவி, மேனேஜர், ஆவின் வேலூர் ஆகியோர் லஞ்சமாக கேட்கும் ரூ.50,000/- பணத்தை கொடுத்து எனக்கு பால் கேன்களை கொண்டு சென்ற வகையில் கிடைக்கப்பெற வேண்டிய தொகையை பெற எனக்கு விருப்பமில்லை, ஆகையால் திரு.ரவி, மேனேஜர், ஆவின், (VDCMP Union Ltd.,) வேலூர் அவர்களுக்கு ரூ.50,000/-தை கொடுக்கும்போது அவரை பிடித்தும் என்னிடம் லஞ்சமாக பணம் கேட்டு திரு.ரவி, மேனேஜர் மூலமாக லஞ்சமாக பணத்தை பெறும் திரு.கணேசன், முன்னாள் பொது மேலாளர், ஆவின், வேலூர் (VDCMP Union Ltd.,) ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxxxxxx (P.முருகையன்) 23.12.2020.

Sir, Received the complaint on 23.12.2020 at 07:00 hrs, after verifying the antecedents of the accused and credibility of the complainant by conducting enquiry, on 23.12.2020 at 08.00 hrs registered a case in Vellore V&A.C. Crime No.22/2020 U/s. 7(a) of the PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018. Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 23/12/2020, DSP, V&AC, VLR.

The FIR in original along with the complaint sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the other copies to the officers concerned.

23/12/2020

HEMACHITHRA K.S.,
DSP, V&AC, VELLORE